*1989 மே 11]*

திரு. உ. ரா. வரதராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் விளையாட்டு அரங்கங்கள் துவக்கப்படுவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு அமல்படுத்தப் படாமல் பல உள்ளன. அதைப்பற்றி அரசு அறியுமா? அவற்றை அமல்படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வாய்ப்புள்ளபோது கவனிக்கப்படும்.

விழுப்புரம் கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பு.

235—(* வினா எண். 967) திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பு துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இப்பொருள் குறித்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருப்பூர் நகரில் ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்துதல்

236—(* வினா. எண். 961) திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் மையப் பகுதியிலுள்ள ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் சுமார் 2, 3 லட்சம் மக்கள் வசிக்கக்கூடிய ஒரு பெரும் தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தினால் வாகனங்கள், போக்குவரத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில் நகரத்தின் மையத்திலே ரெயில்வே இருப்புப் பாதையை இணைக்கக்கூடிய ஒரே ஒரு பாலம் மிகக் குறுகிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால் பல மணி நேரம் போக்குவரத்துக்கள் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே அதனுடைய தேவையைக் கணக்கில் எடுத்து அரசு அந்த புதிய பாலத்தை உருவாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.